**செ. கு. எண்: 110** **நாள் : 10.06.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.6.2014

மதுரை மாவட்டம், தமிழ்நாடு சிறப்பு காவல் படை **6**-ம் அணி, 'இ' நிறுமத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.பாண்டி அவர்கள் 22.2.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், 'Q' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை உதவி ஆய்வாளர் திருமதி M.தமிழ்செல்வி அவர்கள், ராமநாதபுரம் மாவட்டம், சண்முகாபுரம் அருகே 22.2.2014 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.2.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.வீரபாண்டியன் அவர்கள் 8.3.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல் ராயப்பேட்டை மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. W.ஆரோக்கியதாஸ் அவர்கள் 12.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், இரும்புலிகுறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.செல்வம் அவர்கள் 14.3.2014 அன்று இரும்புலிகுறிச்சி – ஜெயங்கொண்டம் சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.சரவணன் அவர்கள் 15.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், இலத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. K. ஐயப்பன் அவர்கள் 16.3.2014 அன்று பணி நிமித்தமாக பேருந்தில் சென்று கொண்டிருந்த போது, நெஞ்சுவலி ஏற்பட்டு

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பாதுகாப்பு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R. முரளி அவர்கள் 27.2.2014 அன்று உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி 19.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கிண்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு K. சுப்பிரமணியன் அவர்கள் உடல் நலக் குறைவால் 23.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R.ரமேஷ் அவர்கள் 23.3.2014 அன்று உடல் நலக் குறைவால் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஆரோக்கியதாஸ், ஐயப்பன், முரளி, சுப்பிரமணியன்; தலைமைக் காவலர்கள் பாண்டி, செல்வம், சரவணன்; காவலர்கள் வீரபாண்டியன், ரமேஷ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**